# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## HELD IN MAY - 2007

## PHY 2.15 – WESTERN LOGIC

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி - I

01. மேலைத்தேய அளவையியலின் வளர்ச்சிக்கு கீழ்க்காணும் விடயங்கள் எவ்வகையான பங்களிப்பினைச் செய்துள்ளன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(அ) பாரம்பரிய அளவையியல்
(ஆ) குறியீட்டு அளவையியல்

(10 X 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து, எடுகூற்றுக்களிலிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வாய்ப்பானவை எனக் காட்டுக. ஒவ்வொரு வாதத்திற்கும் நீர் பயன்படுத்திய சுருக்கத் திட்டத்தினைத் தருக.

(அ) நீதியே செம்மையானது அல்லது மக்களுக்கு நீதியாயிருக்க விருப்பமில்லை. நீதியற்றவர்கள் வளமாய் உள்ளனர் எனின் நீதி செம்மையானது அல்ல. ஆகவே, மக்களுக்கு நீதியாயிருக்க விருப்பம் என்றால் நீதியற்றவர்கள் வளமாயிருக்கக் கூடாது.

(ஆ) ரவி கவனமுடையவனும் புத்தியுள்ளவனும் எனின், அவன் கவனமாயிருந்தால் பரீட்சையில் சித்தியடைவதோடு அவனுக்கு நல்ல தொழில் கிடைக்கும். ரவி கவனமுடையவனும், புத்தியுள்ளவனும் ஆவான். ஆகவே, அவன் பரீட்சையில் சித்தியடைவான் அல்லது அவனுக்கு நல்ல தொழில் கிடைக்கும்.

(இ) ஒன்றில் மூன்றாம் உலக யுத்தம் நிகழும் அல்லது உலகில் சமாதானம் நிகழுமாயின் மக்கள் சமாதானப் பிரியர்களாக இருப்பர். வல்லரசுகள் யுத்தத்தை விரும்பவில்லை எனின் மக்கள் சமாதானப் பிரியர்கள் எனின் உலகில் வறுமை முடிவடையும். மூன்றாவது உலக யுத்தம் நிகழுமாயின் வல்லரசுகள் போரை விரும்புகின்றன என்பது பெறப்படும். ஆனால் வல்லரசுகள் போரை விரும்பவில்லை. ஆகவே, உலகில் சமாதானம் நிகழுமாயின் மூன்றாம் உலக யுத்தம் நிகழும்.

(ஈ) அவன் வைத்தியன் ஆவான் எனின் அவன் அதிக சீதனம் பெறுவான். அவன் அதிக சீதனம் பெறுவான் எனின் ஒன்றில் அவன் பணக்காரன் ஆவான் அல்லது மனைவிக்கு அடிமையாவான். ஆகவே, அவன் பணக்காரனாகவும் இல்லை அத்துடன் மனைவிக்கு அடிமையாகவும் இல்லை எனின் அவன் வைத்தியனுமில்லை. அதிக சீதனமும் பெறவில்லை.

(5 X 4 = 20 புள்ளிகள்)

03. பின்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து நேரல் முறை உண்மை அட்டவணையைப் பாவித்து அவை வாய்ப்பானவையோ, அல்லவோ எனத் துணிக.

(அ) அரிஸ்டோட்டலின் கூற்று கருத்துள்ளதெனின் அக்கூற்று ஒரு விஞ்ஞானக் கூற்று அல்லது மெய்யியற் கூற்று அல்லது உண்மையான கூற்றாகும். அவருடைய கூற்று விஞ்ஞானக் கூற்றுமல்ல, மெய்யியற் கூற்றுமல்ல ஆனால் உண்மையான கூற்றாகும். ஆகவே, அரிஸ்டோட்டலின் கூற்று கருத்தற்றதாகும்.

(ஆ) அவன் அமைச்சுக்குப் போனான் எனினும் அமைச்சரைச் சந்திக்கவில்லை. அவன் அமைச்சரைச் சந்திக்கவில்லையாயின் அமைச்சர் அவனைச் சந்திக்கவில்லை. அமைச்சர் அவனைச் சந்திக்கவில்லையாயின் அவனுக்கு இடமாற்றம் கிடைக்கவில்லை. அவன் அமைச்சுக்குப் போனான் ஆயின் அவனுக்கு இடமாற்றம் கிடைக்கும். ஆகவே, அவன் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்படுவான்.

(இ) அவன் ஆரோக்கியமுள்ளவனெனின் அவன் நன்றாக வேலை செய்வான். அவன் நன்றாக வேலை செய்தால் அவன் அதிக வருமானம் பெறுவான். அவன் அதிக வருமானம் பெற்றால் அவன் திருமணம் செய்வான். அவன் ஆரோக்கியமுள்ளவன். ஆகவே, அவன் திருமணம் செய்வான்.

(ஈ) மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்கள் அல்லது பரீட்சையில் தவறுகிறார்கள் ஆயின் அவர்கள் விரிவுரைக்கு வருகிறார்கள் என்பதுடன் கவனமாய் குறிப்பெடுக்கிறார்கள் அல்லது அவர்களுக்கு நல்ல ஞாபக சக்தி உண்டு எனின் எல்லாப் பாடங்களிலும் அவர்களுக்கு நல்ல புள்ளிகள் கிடைக்கிறது. ஆகவே, மாணவர்கள் நன்றாகப் படித்தால் எல்லாப் பாடங்களிலும் அவர்களுக்கு நல்ல புள்ளிகள் கிடைக்கும்.

(5 X 4 = 20 புள்ளிகள்)